**செய்தி வெளியீடு எண்:610** **நாள் :02.12.2014**

**<u>செய்தி வெளியீடு</u>**

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் விதி **110**—ன் கீழ் **11.08.2014** அன்று சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட ரூ.**700** கோடிக்கான ஒருங்கிணைந்த துணிநூல் பூங்கா திட்டத்தினை ஈரோடு, நாமக்கல், கரூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் அமைந்துள்ள சாய / சலவை பட்டறைகள் செயல்படுத்துவதற்கான முன்னேற்பாடுகள் குறித்து சம்மந்தப்பட்ட அலுவலர்களுடன் இன்று **02.12.2014** தலைமைச் செயலகத்தில் **மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திருமதி. கோகுல இந்திரா** மற்றும் **மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. தோப்பு என்.டி.வெங்கடாச்சலம்** ஆகியோர்களால் ஆலோசனை செய்யப்பட்டது. இக்கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழ்நாடு வாட்டர் இன்வெஸ்ட்மெண்ட் கம்பெனி லிமிட்டெட், திருப்பூர் மாவட்டத்தில் இயங்கி வரும் பூஜ்ஜிய நிலை சுத்திகரிப்பு நிலையத்தை பின்பற்றி இத்திட்டத்தினை செயல்படுத்துவது குறித்து விரிவாக எடுத்துரைத்தனர். இந்த ஆலோசனை கூட்டத்தில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைவர் திரு. கே.ஸ்கந்தன் இ.ஆ.ப., கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறை முதன்மைச் செயலாளர் திரு. ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய உறுப்பினர் செயலர் முனைவர் கே. கார்த்திகேயன், கைத்தறி (ம) துணிநூல் துறை உயர் அதிகாரிகள், மாசு கட்டுப்பாடு வாரிய உயர் அதிகாரிகள் மற்றும் சுற்றுச்சூழல் துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

அதன்பின்னர், திருப்பூர் சாயப்பட்டறை உரிமையாளர்கள் சங்க பிரதிநிதிகள் கலந்துகொண்ட ஆலோசனைக் கூட்டத்தில், தங்களது தொழிற்சாலைகள் மேலும் சிறப்புடன் தொடர்ந்து செயலாக்கத்திற்காக **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் ரூ. **200** கோடியிலான

வட்டியில்லா கடன் கொடுத்தமைக்காக **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டனர். மேலும் ஊக்குவிக்க கைத்தறி மற்றும் துணிநூல் துறை மற்றும் மாசு கட்டுப்பாடு வாரியம் சில நடவடிக்கைகளை எடுக்கக் கோரியும் குறிப்பிட்டனர். இதனை பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக மாண்புமிகு அமைச்சர்கள் தெரிவித்தனர்.

இதுபோல், திருப்பூர் துணியில் சாய அச்சிடுவோர் (Printing Units) சங்கம், மற்றும் அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கப் பிரதிநிதிகளுடன் **மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. தோப்பு என்.டி.வெங்கடாச்சலம்** அவர்கள் ஆலோசனை நடத்தினார்கள். இக்கூட்டத்தில் கலந்துகொண்ட திருப்பூர் துணியில் சாய அச்சிடுவோர் சங்கம், தங்களது தொழில் மேன்மேலும் சிறக்க அரசு உதவி செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டனர். மேலும், அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கப் பிரதிநிதிகள், மாசு கட்டுப்பாடு வாரியம் விதித்துள்ள நிபந்தனைகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என கோரிக்கை வைத்தனர். இவர்களின் கோரிக்கைகள் குறித்து விவாதித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

.........

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**